# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1919/82 - 2015 ජුනි මස 19 වැනි සිකුරාදා - 2015.06.19

1919/82 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல. : சி எஸ்ஏ/ 7/8/15

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்**
**அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால்**

முத்திரை

மைத்திரிபால சிறிசேன

1. திருவாளர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம அவர்கள்
2. திருமதி திமின்கு படதுருகே பிரியந்தி சுரஞ்ஜனா வித்யாரத்ன அவர்கள்
3. திருமதி மனோ இராமநாதன் அவர்கள்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் (393 ஆம் அத்தியாயம்) 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக என்னால், 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதிய பணிப்புரையின் மூலம், இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வதிந்த எவரேனும் ஆட்கள் சுயவிருப்பமின்றி அவர்களின் வதிவிடங்களில் இருந்து அகற்றிக் கொண்டு செல்லப்பட்டார்களா அல்லது காணாமற்போயுள்ளார்களா என்பதை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

அத்துடன் இடையிடையே குறித்த மூலப் பணிப்புரைக்கு திருத்தங்களும் சேர்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாதலாலும்,

அத்துடன் இந்த ஆணைக்குழுவுக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்பு அதிகரித்துள்ளதோடு, அதன் பணிகளை மிகத் துரிதமாகவும் வினைத்திறமையோடும் நிறைவேற்றும் பொருட்டு தற்போது பதவிகளை வகிக்கும் ஆணையாளர்களின் எண்ணிக்கை போதாதென்பது என்னால் இனம் காணப்பட்டுள்ளதாதலாலும்,



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி திருவாளர் விஜேசேகர ஆராச்சிகே திலகரத்ன ரத்நாயக்க அவர்களையும் ஓய்வுபெற்ற அமைச்சுச் செயலாளர் திருவாளர் ஹேவாஹெட்டிகே சுமணபால அவர்களையும் அவர்களின் விவேகம், திறமை, நேர்மை என்பன பற்றி மிகுந்த நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்டு, மேலே சொல்லப்பட்ட பணிப்புரையின்படி தாபிக்கப்பட்டுள்ள விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளராக இத்தால் நியமிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் நாளாகிய இன்று, கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

7 - 300

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.